# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2044/28 - 2017 නොවැම්බර් මස 08 වැනි බදාදා - 2017.11.08

*2044/28 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**ஊவா மாகாணத்தின் மாகாண சபை**

ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க,
நூலக சேவைகள் சபை (திருத்த) நியதிச்சட்டத்தை அனுமதித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின், மாகாண சபையால் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் 16 ஆந் திகதிய ஊவா மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப் பட்டுள்ள பூர்வாங்க நியதிச்சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் அறியத்தருகின்றேன்.

**ஆர். ஏ. எச். ஏ. சமரசிங்க,**
செயலாளர்,
ஊவா மாகாணத்தின் மாகாண சபை,
பதுளை.

ஊவா மாகாணத்தின் மாகாண சபைச் செயலாளர் அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை,
2017, நவெம்பர் 02.

**ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க,**
**நூலக சேவைகள் சபை (திருத்த) நியதிச்சட்டம்**

ஊவா மாகாணத்தின், மாகாண சபையின் 2000 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கத்தின் நூலக சேவைகள் சபை நியதிச்சட்டத்தை திருத்தியமைத்தல் தொடர்பாக அமுலாக்கல் நியதிச் சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபை மூலம் இவ்வாறு அமுலாக்கப்படவுள்ளது.

குறும் பெயரும் நடை முறைக்கு வரும் திகதியும்

1. இந்நியதிச் சட்டம் ஊவா மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குறும்பெயரும், நூலக சேவைகள் சபை நியதிச்சட்டம் (திருத்தம்) நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்தப்படுவதுடன் நடைமுறையாகும் வேறு வழிமுறைகள் கூறப்பட்டிருக்குமானால் அவை மாத்திரம் ஊவா மாகாண ஆளுநர் மூலம் அனுமதி வழங்கப்பட்ட திகதி முதல் அதிகாரமுடையதாகும்.


1A - PG3745 - 17(2017/11)

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*3 (V) புதிய உப சரத்தை பிரதான நியதிச்சட்டம் சேர்த்தல்.*

2. இங்கு பிரதிபலிக்கும் 'பிரதான நியதிச் சட்டம்' மூலம் அறிமுகப்படுத்தப்படும் ஊவா மாகாண சபையின் 2000 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நூலக சேவைகள் சபை நியதிச்சட்டம் 3 (V) உப சரத்தை இதன் பிறகு கீழ்க்காணும் புதிய உப சரத்துக்குள் உள்ளடக்கப்படுவதுடன் அது பிரதான நியதிச்சட்டத்தின் 3 (V) உப சரத்தாக அதிகாரமுடையதாகும்.

3 (V) உ ப நூலக சேவை விஸ்தரிப்புக்கு தேவையான கூட்டத்தீர்மானங்கள் நடுநிலையுடனும், ஒன்றிணைந்ததுமாக தயாரித்த நூலக பொருள் பாதுகாப்பு பிரதேச சேகரிப்பு அபிவிருத்தியும், சேர்வுடாப்பு செயற்பாடுகள், உள்ளக நூலக பரிமாற்று சேவை, சேகரிப்பு சேவைகள், நடமாடும் நூலக சேவையை ஆரம்பித்தல், தகவல் வலையமைப்புக்களை உருவாக்கல் ஆகிய செயற்பாடுகள் மூலம் நூலக அபிவிருத்திக்கான அடிப்படை செயற்பாடுகளை செய்வதற்கும் மாகாணத்தின் நூலக சேவையை ஒருமைப்பாட்டுடன் கட்டியெழுப்புதல்.

*6 (அ) (I) (எ) புதிய உப சரத்து பிரதான நியதிச் சட்டத்திற்கு உள்ளாக்கப்படல்*

3. பிரதான நியதிச்சட்டத்தின் 6 வது சரத்து (அ) (i) (எ) உப சரத்து இதன் பிறகு கீழ்க்காணும் வகையில் புதிய உப சரத்தில் உள்ளடக்கப்படுவதுடன், இப் பிரதான நியதிச்சட்டத்தின் 6 (ஆ) Iஆம் IIஆம் உப நியதிக்கட்டமாக அதிகாரமுடையதாகும்.

6 (அ) (I) (எ) மாகாண கலாச்சார அமைச்சின் செயலாளர்.

*6 (அ) (I) மற்றும் (II) (எ) புதிய உப சரத்தை பிரதான நியதிச் சட்டத்திற்கு உள்ளடக்கல்*

4. பிரதான நியதிச்சட்டத்தின் 6 வது சரத்து (அ) (i) (எ) உப சரத்து இதன் பிறகு கீழ்க்காணும் புதிய உபசரத்தில் உள்ளடக்கப்படுவதுடன் 6 (ஆ) (I) ஆம் உப சரத்தாக அதிகாரமுடையதாகும்.

*சபையின் தலைவரின் வேலை பொறுப்புக்கள்*

6 (ஆ) (I) ஆம் கல்வி பாடநெறி தொடர்பான அமைச்சரின் மூலம் நியமிக்கப்படும் சபையின் தலைவர் சபையின் பணிப்பாளர் சபை கூட்டத்தில் தலைமைத்தாங்குதல் வேண்டும். அவன்/அவள் மண்டபத்தின் பிரதான தலைமையதிகாரியாக வேண்டும். அரசினதும் மாகாண சபையினதும் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நூலக சேவைகள் சபையை செயற்படுத்துவது தலைவரின் பொறுப்பாகும்.

*பணிப்பாளர் சபை கூட்டத்தில் பங்கு பற்றல்*

II. பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கத்தவர்கள் ஐந்துபேர் கூட்டத்தில் பங்குபற்றுதல் வேண்டும்.

*வேறுபாடுகள் காணப்படும் போது சிங்கள, உரை மேலோங்குதல்*

5. இந் நியதிச்சட்டம் சிங்களம், தமிழ் ஆகிய மொழியில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்கியங்களில் வேறுபாடுகள் காணப்படும் போது அதில் சிங்கள மொழியில் குறிப்பிடப்பட்டுள்ள உரை அதிகாரமுடையதாகும்.

*11-1043*